




நெல்லை மாவட்ட ஜென்சி தி.மு.க. சார்பில் பாளை பி.பி. எல்.மஹாலில் இளைஞர்கள் சந்திப்பு நிகழ்வு மாவட்ட ஜென்சி தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் மாஸ் மு.மைதீன் தலைமையில் நெல்லை மத்திய மாவட்ட மாநகர மகளிரணி வலைதள பொறுப்பாளர் ஜி.மதீஹா முன்னிலையில் நடைபெற்றது. நிகழ்ச்சியை பாளை தொகுதி சமூக வலைதள ஒருங்கிணைப்பாளர் முத்துலெட்சுமி தொகுத்து வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர்கள், இளம்பெண்கள் மற்றும் மாணவர்கள், மாணவியர்கள் 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். நிகழ்ச்சி நிறைவில் மருத்துவர் ஸ்ரீ பூவிழி நன்றியுரையாற்றினார்.

### கொரட்டூர், ஓட்டேரி, அம்பத்தூர், தாம்பரம் பகுதிகளில்

# கஞ்சா, போதை மாத்திரைகள் விற்பனை நாளுக்குநாள் அதிகரிப்பு!

## சோதனையில் 13 கிலோ பறிமுதல் - 15 பேர் சிறையில் அடைப்பு!

*பெரம்பூர், ஜூலை 14-*

*சென்னை மற்றும் புறநகரில் கஞ்சா, போதை மாத்திரைகள் விற்பனை அமோகமாக நடந்து வருகிறது. இதுதொடர்பாக, போலீசார் 15 பேரை அதிரடியாக கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 13 கிலோ கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டன. கொலை, பாலியல் வன்கொடுமை சம்பவங்களை தொடர்ந்து கஞ்சா, போதைப்பொருள் விற்பனையும் அதிகரித்து வருவது பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.*

*சென்னை ஓட்டேரி காவல் நிலையத்துக்கு உட்பட்ட பகுதியில் இரவு நேரங்களில் சிலர் கஞ்சா விற்பனையில் ஈடுபடுவதாக ஓட்டேரி போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.*

*அதன் அடிப்படையில் உதவி ஆய்வாளர் வெங்கடேஸ்வரன் தலைமையிலான போலீசார் நேற்று முன்தினம் பெரம்பூர் பழனி ஆண்டவர் கோயில் தெருவில் உள்ள ஒரு வீட்டை சோதனை செய்தனர். அப்போது அந்த வீட்டில் இருந்து சுமார் 200 கிராம் மதிப்புள்ள 30 பாக்கெட் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது. கஞ்சா பொட்டலங்களை பதுக்கி வைத்திருந்த மதன் குமார் (23) என்பவரை போலீசார் கைது செய்தனர்.*

*இவர் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் பெரம்பூர் ராஜாஜி தெருவைச் சேர்ந்த சஜித் என்கின்ற மண்ட சஜித் (25), கார்த்திக் என்கின்ற கமல் கார்த்திக் (26) என மேலும் இருவரை கைது செய்தனர். இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், மதன்குமார் கடந்த 5 மாதங்களுக்கு முன்பு மற்றொரு வழக்கில் சிறையில் இருந்த போது காசிமேட்டை சேர்ந்த ஜெகன் மற்றும் வினோத் ஆகியோர் பழக்கமாகி கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு அவர்களை பெரம்பூர் பகுதியில் பார்த்து அவர்களிடம் இருந்து 6000 ரூபாய் கொடுத்து கஞ்சா பொட்டலங்களை வாங்கி, அதனை ஓட்டேரி பகுதியில் மதன்குமார் மற்றும் அவரது நண்பர்கள் விற்பனை செய்து வந்தது தெரிய வந்தது.*

*இதையடுத்து பிடிபட்ட மூன்று பேர் மீதும் வழக்கு பதிவு செய்த ஓட்டேரி போலீசார் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இதே போன்று கொடுங்கையூர் பார்வதி நகர் பேருந்து நிறுத்தம் அருகே கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட கொடுங்கையூர் எழில் நகர் பகுதியை சேர்ந்த மணிகண்டன் என்கின்ற கஞ்சா மணி (25) என்ற சரித்திர பதிவேடு ரவுடியை கொடுங்கையூர் போலீசார் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர்.*

**அம்பத்தூர்:**

*ஆவடி காவல் ஆணையரகத்திற்கு உட்பட்ட அம்பத்தூர் காவல் சரகத்தில், உதவி கமிஷனர் குமார் தலைமையில் கஞ்சா பதுக்கல் மற்றும் விற்பனை தொடர்பான சிறப்பு சோதனை நேற்று அதிகாலை நடந்தது. அதன்படி, கள்ளிக்குப்பம், மதுரைவீரன் கோயில் தெரு, ஏரிக்கரை அருகே கஞ்சாவை பதுக்கி வைத்து விற்பனை செய்து வந்த அதே பகுதியைச் சேர்ந்த செல்வபாலாஜி (22), நாவரசு (20), ராஜா (23), ஹேமபிரியன் (18) மற்றும் சந்தோஷ் (20) ஆகிய 5 பேரை புதூர் போலீசார் கைது செய்தனர்.*

*இதேபோல், அம்பத்தூர் தொழிற்பேட்டை போலீசார் மேனாம்பேடு, கருக்கு பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, பைக்கில் கஞ்சா கடத்தி வந்த காந்த் (21) மற்றும் டில்லி பாபு (19) ஆகிய இருவரை கைது செய்தனர்.*

*மேலும், கொரட்டூர், ரெட்டி தெருவில் கஞ்சா பதுக்கி வைத்திருந்த அரவிந்த் (30) மற்றும் மகா விஷ்ணு (21) ஆகிய இருவரை கொரட்டூர் போலீசார் கைது செய்தனர். இதையடுத்து, போலீசார் கைதான 8 பேரிடம் இருந்தும் 8 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர். பிறகு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.*

**தாம்பரம்!**

*இதுபோல, தாம்பரம் மாநகர காவல் ஆணையரக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சட்டவிரோத போதைப்பொருள் பழக்கத்தை முற்றிலுமாக ஒடுக்கும் பொருட்டு, தாம்பரம் மாநகர காவல் துறையினர் தீவிர கண்காணிப்பு மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, நேற்று முன்தினம் மேற்கு தாம்பரம், முடிச்சூர் சாலையில் உள்ள தனியார் கூரியர் நிலையத்திற்கு மருத்துவமனையின் பெயரில் சந்தேகத்திற்கிடமான ஒரு பார்சல் வந்திருப்பதாக தாம்பரம் காவல் நிலைய போலீசாருக்கு தகவல் கிடைத்தது.*

*இந்த தகவலின் பேரில் சம்பவ இடத்திற்கு சென்ற போலீசார் அந்த பார்சலை வாங்குவதற்காக வந்த குரோம்பேட்டை, லட்சுமிபுரத்தைச் சேர்ந்த லீ என்பவரை மடக்கிப் பிடித்து விசாரணை நடத்தினர். அதில், பார்சலில் அரசால் தடை செய்யப்பட்ட 1,100 போதை மாத்திரைகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு அவை பறிமுதல் செய்யப்பட்டன.*

*அதேபோல், சிங்கப்பெருமாள்கோவில் காவல் நிலைய போலீசார், காசிமேடு காவல் நிலையத்தின் 'பி' பிரிவு சரித்திரப் பதிவேடு குற்றவாளியான செந்தில் (எ) தாடி செந்தில் என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 5 கிலோ கஞ்சா, 60 ஆயிரம் ரூபாய் பணம் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட கார் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.*

*கைது செய்யப்பட்ட இருவர் மீதும் போதைப் பொருள் மற்றும் மனநிலை மாற்றும் பொருட்கள் தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அவர்கள் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர்.*

*தாம்பரம் மாநகர காவல்துறை, நகரில் போதைப்பொருள் கடத்தல் மற்றும் விற்பனையை முற்றிலும் ஒழிக்கும் நோக்கில் இத்தகைய தீவிர நடவடிக்கைகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. பொதுமக்களை போதைப்பொருள் பழக்கத்திலிருந்து பாதுகாக்கவும், நகரின் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநிறுத்தவும் காவல் துறையின் இந்த நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழகத்தில் கொலை, கொள்ளை மற்றும் பாலியல் வன்கொடுமை சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில், சென்னை மற்றும் புறநகரில் கஞ்சா, போதை மாத்திரை உள்ளிட்ட பொருட்கள் விற்பனை அமோகமாக நடந்து வருவது பொதுமக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது.*


**13 வது ஆண்டு நினைவு நாள்**



14.7.2013

திருமதி **எஸ்.துரைப்பாண்டிச்சி** அம்மாள்

(க/பெ. மறைந்த கலைமாமணி

**எஸ்.எஸ்.சிவசூரியன்** (நடிகர்)

**தாங்கள் இந்த மண்ணை விட்டு மறைந்தாலும்**

**எங்கள் மனதை விட்டு மறையவில்லை!**

மகன்கள்: **எஸ். சிதம்பரம், எஸ். கந்தகுமார், பூச்சி எஸ். முருகன்**

மற்றும் மகள்கள், மருமகன்கள், மருமகள்கள், பேரன்கள், பேத்திகள்


# விஜய் - அண்ணாமலை: பா.ஜ.க.வின் இரட்டைக் குழந்தைகள்!

நேற்று முன்தினம் அண்ணாமலை தனது 'வீ த லீடர்ஸ்' அமைப்பின் முதல் கூட்டத்தை பொள்ளாச்சியில் நடத்தினார். தமிழ்நாட்டின் பெரும்பாலான சேனல்கள் அதை நேரலை செய்தன. பல தொலைகாட்சிகளில் அவரது பேச்சு குறித்த விவாதங்கள் நடைபெற்றன. மறுநாள் பாரம்பரியம் மிக்க ஒரு நாளிதழில் அது முகப்புச் செய்தியானது. இதோ தமிழகத்தை மீட்க அடுத்த தேவ தூதர் வந்துவிட்டார்.

யார் இந்த அண்ணாமலை? ஒரு வி.ஆர்.எஸ் கொடுத்த ஐ.பி.எஸ். அதிகாரி. தீவிர ஆர்.எஸ்.எஸ் சுயம் சேவக். ரஜினி காந்த் அரசியலுக்கு வருவதாக செய்திகள் அடிபட்டபோது அதற்கு ஒரு பக்கபலமாக பா.ஜ.க.வால் அனுப்பப்பட்டவர் அண்ணாமலை. பிறகு ரஜினி காந்த் கடைசி நேரத்தில் சுதாரித்துக் கொண்டு அரசியலுக்கு வரும் முடிவை கைவிட்ட பின் பா.ஜ.க. அதன் தமிழகத் தலைவராக அண்ணாமலையை முன்னிறுத்தியது.

**தி.மு.க.வுக்கு எதிராக பச்சைப் பொய்களை விஜய்க்கு முன்னதாக பரப்பியவர் அண்ணாமலை. முக்கியமாக செந்தில் பாலாஜியால் 'வாட்ச்' விவகாரம் உட்பட பலவற்றில் அம்பலப்படுத்தப்பட்டவர். அவரால் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டவர். அதற்காக செந்தில் பாலாஜியை பழி தீர்க்க அத்தனை ஆயுதங்களையும் பயன்படுத்தியவர். ஆளுநரிடம் தி.மு.க.விற்கு எதிராக ஊழல் புகார் என்ற பெயரில் ட்ரங்க் பெட்டிகளில் வெற்றுக் காகிதங்களைக் கொடுத்தது முதல் தன்னைத் தானே சவுக்கால் அடித்துக்கொண்டது வரை பல கேலிக்கூத்துகளை அரங்கேற்றியவர்.**

**அவரை ஒரு தலைவனாக்க ஊடகங்கள் படாதபாடுபட்டன. அவர் போகுமிடங்களுக்கெல்லாம் சென்று அவரது பொய்களைப் பரப்பின. எதிர்த்துக் கேள்வி கேட்ட ஊடகவியலாளர்களை அண்ணாமலை அவமானப்படுத்தினார். ஆனால் ஊடகங்களுக்கு கொடுக்கப்பட்ட அன்னாமலையை தலைவனாக்கும்; அசைண்ட்மெண்டி'ற்காகப் பல ஊடகங்கள் ராப்பகலாய் உழைத்தன. அண்ணாமலை அ.தி.மு.க. எதிர்ப்பிற்கான ஆயுதமாய் பயன்படுத்தப்பட்டு வந்த சூழலில் பா.ஜ.க விஜய்யை முன்வைத்து தன் பாதையை மாற்றியது.**


**மனுஷ்ய புத்திரன்**

மாநில ஆலோசகர்,

தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி.




தமிழ்நாட்டில் கடும் பா.ஜ.க. எதிர்ப்பு நிலவுவதால் கழகங்கள் இல்லாத தமிழ்நாடு என்ற தன் கனவை நிறைவேற்றவேண்டும் என்றால் அது அண்ணாமலையை வைத்து நேரடியாகச் செய்ய முடியாது என்ற சூழலில் பா.ஜ.க. விஜய்யின் அரசியலுக்கு உத்வேகம் அளிக்கத் தொடங்கியது. செங்கோட்டையனை பா.ஜ.க.தான் த.வெ.கவிற்குள் அனுப்பியது. ஐ.ஆர்.எஸ். அதிகாரி அருண்ராஜ் பதவியை ராஜினாமா செய்துவிட்டு த.வெ.கவிற்கு வந்ததும் இப்படித்தான். தி.மு.கவிற்கு எதிராக பா.ஜ.க.வின் சமூக வலைத்தள கட்டமைப்பு எவ்வாறு த.வெ.க.விற்கு பயன்பட்டது என்று ஊடக ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள்.

அதே சமயம் பா.ஜ.க. சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணியில் எந்த ஆர்வமும் காட்டவில்லை. ஒப்புக்கு கூட்டணியில் இருந்தது. வழக்கமாக தேர்தலில் ஆவேசமாகச் செயல்படும் மோடி-அமித் ஷா இந்தத் தேர்தலைக் கண்டு கொள்ளவே இல்லை. எடப்பாடி பழனிச்சாமியை தனித்து போராட விட்டனர் என்பதே உண்மை. அ.தி.மு.க. அழிந்து தாங்கள் வரவேண்டும் என்றால் அதற்கு முதலில் ஒரு இடைநிலை சக்தியாக விஜய் வரவேண்டும் என த.வெ.க.விற்கு வழிவிட்டு நின்றது. பா.ஜ.க. அண்ணாமலையை கொஞ்ச காலத்திற்கு கண்ணில் படாமல் ஒளித்துவைத்துவிட்டு, அண்ணாமலை அளவுக்கு பிரபலம் இல்லாத நயினார் நாகேந்திரன் பா.ஜ.க. தலைவராக்கப்படுகிறார். விஜய்க்கு பா.ஜ.க , அ.தி.மு.க. கூட்டணியிலிருந்து பெரிய தொந்தரவு எதுவும் இருக்கக்கூடாது என்பது தான் அதற்குக் காரணம்.

பா.ஜ.க. விரும்பியிருந்தால் அ.தி.மு.க.- பா.ஜ.க.- த.வெ.க. கூட்டணியை உருவாக்கியிருக்க முடியும். அப்போது அக்கூட்டணி வெற்றி பெற்றால் எடப்பாடி தான் முதலமைச்சர் ஆவார். அதனால் பா.ஜ.க.விற்கு பெரிய பயன் இல்லை. மாறாக முதலில் அரசியல் தெரியாத, வலிமையற்ற ஒருவர் தமிழ்நாட்டில் ஆட்சிக்கு வரவேண்டும். பின்னர் அவரை வீழ்த்த வேண்டும் என்பதுதான் பா.ஜ.க.வின் தொலைநோக்குத் திட்டம்.

விஜய்யின் குடுமி இன்று கரூர் விவகார வழக்கில் வசமாக பா.ஜ.க.விடம் சிக்கியிருக்கிறது. ஒன்றிய அரசை எதிர்க்க மாட்டோம் என விஜய் திரும்பத் திரும்ப 'சரண்டர்' வாக்குமூலம் கொடுக்கிறார். ஊரக வேலைவாய்ப்புத் திட்டம், மும்மொழிக் கொள்கை, மேகதாது விவகாரம், காவிரியில் நீர் திறப்பது, ஆளுநரின் போட்டி அரசாங்கம் என எல்லாப் பிரச்சினைகளிலும் எப்படி பவ்யமாக கண்மூடி வாய் பொத்தி நிற்கிறார்கள் என்பதைப் பார்க்கிறோம். அவர்கள் விரும்பியபடி பெரும்பான்மை இல்லாத, பலவீனமான தங்களுக்கு அஞ்சி நடுங்குகிற, எந்தக் கொள்கையுமில்லாத தனது ஏஜெண்டுகளை உள்ளடக்கிய ஒரு பொம்மை அரசை உருவாக்கிவிட்டார்கள்.

**இதே திட்டம்தான் காங்கிரஸிற்கு இருந்தது. அ.தி.மு.க. அழிந்தால்தான் தாங்கள் வளர்வோம் என பா.ஜ.க நினைத்ததுபோலவே தி.மு.க. பலவீனப்பட்டால்தான் தாங்கள் வளர முடியும் என ராகுல் காந்தி நினைத்தார். கூட்டணியை சிதைக்க எல்லா சதிகளையும் மேற்கொண்டார். பா.ஜ.க. தலைவர்கள்போலவே தமிழ்நாட்டில் பிரச்சாரத்திற்கு வர ராகுல்காந்தி மறுத்தார். பா.ஜ.க.வின் திட்டத்திற்கு ஒரு 'கரசேவக'ராக ராகுல் காந்தி செயல்படுவதைக் கண்டு அமித்ஷா எப்படி சிரித்திருப்பார் என்பதை கற்பனை செய்யவே வேடிக்கையாக இருக்கிறது. ராகுல் காந்தி- அமித்ஷா இருவரும் நினைத்தது நடந்தது. தங்கள் கூட்டணிக்கு துரோகம் இழைத்த காங்கிரஸ், பா.ஜ.க. இருவருமே விஜய்யின் வெற்றியால் ஆதாயமடைந்தனர். காங்கிரஸிக்கு மந்திரி சபையில் இடம் கிடைத்தது. பா.ஜக.விற்கோ தங்களுக்கான ஒரு நிழல் அரசாங்கமே கிடைத்தது. அமித்ஷா - ராகுல் காந்தி இருவருமே திராவிட இயக்கங்களை அழித்தொழிக்கும் பணியில் இணைந்த கரங்களாக செயல்பட்டு வருகின்றனர்.**

இந்த இடத்தில்தான் அண்ணாமலையின் 'புத்துயிர்ப்பு' நடைபெறுகிறது. அமித்ஷாவிடம் ஆசிவாங்கிக்கொண்டு தனது புதிய இயக்கத்தை தொடங்குகிறார். அந்த இயக்கத்தின் பெயர்கூட தி.மு.க.விடமிருந்து கடன் வாங்கியதுதான். 'நான் முதல்வன்' என்ற பெயரின் ஒருமையைத்தான் 'we the leaders' என்ற பன்மையாய் ஆங்கிலத்தில் மாற்றியிருக்கிறார்கள்.

த.வெ.க. அரசு விரைவில் செல்வாக்கு இழக்கும் என்பதற்கு இந்த இரண்டு மாத ஆட்சியின் அவலங்களே சாட்சி. அப்போது த.வெ.க. மாயையிலிருந்து விலகும் இளைஞர்களை மீண்டும் திராவிட இயக்கங்கள் பக்கம் செல்லவிடாமல் தடுத்து திசைதிருப்பலாம் என்ற திட்டத்தோடு பா.ஜ.க.வால் தொடங்கப்பட்ட மாற்று இயக்கம்தான் அண்ணாமலையின் இயக்கம். அதாவது தமிழ்நாட்டில் ஆளும் கட்சியும் எங்கள் ஏஜெண்ட்தான். எதிர்கட்சியும் எங்கள் ஏஜெண்ட்தான் என்ற நிலையை பா.ஜ.க. உருவாக்க முயற்சிக்கிறது.

அதற்காகத்தான் ஊடக எலிகள் முதல் நாளிலேயே அண்ணாமலை பின்னால் அம்மணமாய் ஓடுகின்றன. விஜய்க்கும் அண்ணாமலைக்கும் முதலாளி ஒருவர்தான். முதலாளியின் அசைண்மெண்ட்தான் வேறு வேறு. அண்ணாமலைக்கு ஊழியம் செய்வது என்பது ஊடகங்களுக்கு ஏற்கனவே கொடுக்கப்பட்ட காண்ட்ராக்ட்தான். இப்போது அது புதுப்பிக்கப்பட்டிருக்கிறது.

**சதியினால் பெற்ற வெற்றி என்பது ஒரு விதிவிலக்கான விபத்தாக இருக்க முடியுமே தவிர விதியாக இருக்க முடியாது. இந்தியாவில் பா.ஜ.க.விற்கு சவால்விடும் உறுதியான அரசியல் கட்டமைப்பைக் கொண்ட கட்சி தி.மு.க. அதேபோல அ.தி.மு.க.வின் கட்டமைப்பும். இந்த இரண்டு கட்சிகளையும் ஊடகங்களின் துணையால் விஜய்- அண்ணாமலையின் கோமாளி அரசியலை வைத்து முடிவு கட்டலாம் என நினைப்பது சிறுபிள்ளைக் கனவு. அதனால்தான் பா.ஜ.க.வின் திட்டங்களுக்கு ஊழியம் செய்துகொண்டிருக்கும் சில கட்சிகளும் ஊடகவியலாளர்களும் தி.மு.க. - அ.தி.மு.க. கூட்டணி என்ற வதந்தியைக் கண்டே பதறுகிறார்கள்.**

**விஜய்- அண்ணாமலை இருவருமே அரசியலில் எந்த பண்பும் இல்லாத கேளிக்கை அரசியல்வாதிகள். பொய் சொல்ல கொஞ்சம்கூட கூச்சப்படாதவர்கள். சீரழிவு அரசியலில் யார் நாயகர்கள் என்பதில் இவர்கள் இருவருக்கும் கடும் போட்டி ஏற்படலாமே தவிர மக்கள் அரசியலில் அல்ல.**

கார்ல் மார்க்ஸ் ஓரிடத்தில் எழுதுகிறார். 'வரலாற்றில் மாபெரும் சம்பவங்கள் இரண்டுமுறை நிகழ்கின்றன. முதல் முறை அது அவலமானதாகவும் இரண்டாம் முறை கேலிக்கூத்தாகவும் முடிகிறது' என்று.

முதல் அவலமான சம்பவத்தை விஜய் மூலம் பா.ஜ.க. ஏற்கனவே நிறைவேற்றி விட்டது. இரண்டாம் கேலிக்கூத்தான சம்பவம் அண்ணாமலையின் மூலம் விரைவாக நிறைவேற இருக்கிறது.